மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.4,89,67,37,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 10–9–2001 காலை 10–00 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

–ஏதுமில்லை–

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

90. மானியக் கோரிக்கை எண் 35, 36, 54 மற்றும் 55 – பாசனம் மற்றும் கட்டடங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

91. மானியக் கோரிக்கை எண் 38 – சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து மற்றும் மானியக் கோரிக்கை எண் 56 – சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

2001 செப்டம்பர் 8]

92. பொதுப் பணித் துறையின் திட்டச் சாதனை, *2001--2002.* (தமிழ், ஆங்கிலம்)

93. நெடுஞ்சாலைத் துறையின் நிதிநிலை செயலாக்கச் சாதனைகள், *2001-2002.* (தமிழ், ஆங்கிலம்)

— —